தினமணி

## தூத்துக்குடியில் மீன் வளர்ப்பு குறித்த பயிற்சி முகாம்

First Published : 05 Mar 2012 11:06:39 AM IST

தூத்துக்குடி, மார்ச் 4: தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் வளர்ப்புக்கேற்ற கெண்டை மீன்களின் விந்து உறைபதனம் குறித்த பயிற்சி முகாம் 2 நாள்கள் நடைபெற்றது.

தருவைகுளத்தில் உள்ள கல்லூரியில் நடைபெற்ற பயிற்சியை மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மைய விரிவாக்க இயக்குநர் வை.கி. வெங்கிடரமணி தொடங்கி வைத்தார்.

அவர் பேசுகையில், மீன்வளர்ப்புத் துறையில் இயங்கி வரும் விந்து உறைபதனம் செய்யும் ஆய்வகத்தின் செயல்பாடுகள் பற்றியும், உறைபதனம் செய்யப்பட்ட விந்துக்களைக் கொண்டு மீன்களில் செயற்கை இனப்பெருக்கம் செய்வதனால் பெறப்படும் பொரிப்பகங்களில் இருந்தே பாதுகாத்து வந்தால் நல்ல தரமுள்ள மீன்களை விற்பனைக்கு எடுத்துச் செல்ல முடியும் என்றும் கூறினார்.

மேலும், பொரிப்பகங்களில் மீன்குஞ்சு உற்பத்தியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதன் மூலம் நல்ல தரமான மீன்குஞ்சுகளை உற்பத்தி செய்து அதிக உற்பத்தியை பெற முடியும் என்றும் வெங்கிடரமணி தெரிவித்தார்.

பயிற்சியின்போது, கெண்டை மீன்களில், உள் இனப்பெருக்கம் மற்றும் மரபியல் குறைபாடுகள் காரணமாக ஏற்படும் உற்பத்திக் குறைபாடுகளை எவ்வாறு நீக்கலாம் என்பது பற்றி செயல்முறை மூலம் விளக்கப்பட்டது.

தினமலர்
உண்மையின் உரைகல்

## தென்னை சாகுபடி பரப்பு அதிகரிப்பு: வேளாண் துணை இயக்குனர் தகவல்

பதிவு செய்த நாள் : மார்ச் 05,2012,02:42 IST

கருத்தை பதிவு செய்ய

அன்னூர் :""கோவை மாவட்டத்தில் பல விவசாயிகள் தென்னைக்கு மாறி வருகின்றனர். சாகுபடி பரப்பு அதிகரித்துள்ளது,'' என, வேளாண் துணை இயக்குனர் அன்னூரில் தெரிவித்தார்.

சிறு, குறு விவசாயிகள் கணக்கெடுப்பு அன்னூர் வட்டாரத்தில் 11 கிராம ஊராட்சிகளில் நடந்தது. கோவை எஸ்.என்.எஸ்., பொறியியல் கல்லூரி மாணவ, மாணவியர் 84 பேர் பங்கேற்றனர். 620 மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. கணக்கெடுப்பு நிறைவு விழா அன்னூர் வேளாண் அலுவலக வளாகத்தில் நடந்தது.

வேளாண் உதவி இயக்குனர் சீனிராஜ் வரவேற்று பேசுகையில்,""அன்னூர் வட்டாரத்தில் 4,936 விவசாயிகள் விபரம் பதிவு செய்யப்பட்டுள்ளன. விடுபட்டவர்கள், வேளாண் அலுவலகத்தில் போட்டோ, வங்கி, நில விபர ஆவணங்களுடன் பதிவு செய்து கொள்ள வேண்டும்,'' என்றார்.

கோவை மண் பயன்பாட்டு நிறுவன வேளாண் அலுவலர் மனோகரன் பேசுகையில்,""ஒரு மண் மாதிரியை பரிசோதித்து, ஆய்வு முடிவு தெரிவிக்க 800 ரூபாய் செலவாகிறது. ஆனால் அரசு வெறும் 20 ரூபாய்க்கு மண்ணை பரிசோதித்து முடிவு தெரிவிக்கிறது. இவ்வாய்ப்பை பயன்படுத்தி, விவசாயிகள் மண் மாதிரிகளை கொடுத்து பயன் பெறலாம்,'' என்றார்.

கோவை வேளாண் துணை இயக்குனர் இளங்கோ பேசுகையில்,""விவசாயிகளுக்கு தேவையான மானியம், உரம், பூச்சி கொல்லி மருந்து, சாகுபடி குறித்து திட்டமிட சிறு, குறு விவசாயிகள் எண்ணிக்கை, நில விபரம் அவசியம். 2005ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி கோவை மாவட்டத்தில் 80 ஆயிரம் விவசாயிகள் இருந்தனர். இப்போது 55 ஆயிரம் முதல் 60 ஆயிரம் பேர் இருப்பர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கணக்கெடுப்பில், விவசாயியின் நிலப்பரப்பு எவ்வளவு, கால்நடைகள், பயிர் உள்ளிட்ட விபரங்கள் சேகரிக்கப் படுகின்றன.

சேகரிக்கப்பட்ட விபரங்கள் மற்றும் மண் மாதிரி அடிப்படையில், விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த கையேடு

வழங்கப்படுகிறது. இந்த கையேடு, விவசாயி அடுத்த மூன்றாண்டுகளுக்கு திட்டமிடும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் பற்றாக்குறை காரணமாக பல விவசாயிகள் தோட்டத்தின் ஒரு பகுதியை தென்னந்தோப்பாக மாற்றியுள்ளனர். கோவை மாவட்டத்தில் தென்னை சாகுபடி பரப்பு அதிகரித்துள்ளது.

இவ்வாறு, துணை இயக்குனர் இளங்கோ தெரிவித்தார்.கணக்கெடுப்பில் ஒத்துழைத்த "அட்மா' குழு, பண்ணை மகளிர் குழு உறுப்பினர்கள் கவுரவிக்கப்பட்டனர். எஸ். என்.எஸ்., கல்லூரி டீன் பழனிச்சாமி, என்.எஸ்.எஸ்.ஒருங்கிணைப்பாளர் செந்தில்குமார் உள்பட பலர் பங்கேற்றனர்.

## அரசு கொள்முதல் அறிவிப்பு:கொப்பரை விலை உயர்கிறது

பதிவு செய்த நாள் : மார்ச் 05,2012,02:28 IST

கருத்தை பதிவு செய்ய

திருப்பூர் :அரசு கொள்முதல் அறிவிப்பு காரணமாகவும், அதிக விலையை எதிர்பார்த்து விவசாயிகள் தேங்காயை இருப்பு வைக்க துவங்கியுள்ளதாலும், கொப்பரை விலை உயர்ந்து வருகிறது.

காங்கயம் பகுதியில், 500க்கும் மேற்பட்ட கொப்பரை களங்கள் மற்றும் நூற்றுக்கணக்கான ஆயில் மில்கள்

உள்ளன. காங்கயம் பகுதிகளில் தினமும் சராசரியாக 5,000 டன் தேங்காய் உடைக்கப்பட்டு, 1,500 டன் கொப்பரை உற்பத்தி செய்யப்படுகிறது.

இரு மாதங்களுக்கு முன்பு வரை கிலோ 45 முதல் 48 ரூபாய் வரை விற்று வந்த கொப்பரை விலை, தேங்காய் சீசன் துவங்கி, வரத்து அதிகரித்ததால் விலை சரிந்தது. கடந்த மாதம் ஒரு கிலோ

கொப்பரை சராசரியாக 38 முதல்

39 ரூபாய் வரை விற்றது. இந்நிலையில், அரசு கொள்முதல் அறிவிப்பு காரணமாக கடந்த

சில நாட்களாக விலை உயர்ந்து வருகிறது. வெளிமார்க்கெட்டில் நேற்று ஒரு கிலோ கொப்பரை, 42 முதல்
43 ரூபாய் வரை விற்றது.கொப்பரை உற்பத்தியாளர்கள் கூறியதாவது:
அரசு ஒரு கிலோ கொப்பரை 51 ரூபாய்க்கு கொள்முதல் செய்வதாக அறிவித்துள்ளதால், விவசாயிகள் விலையை எதிர்பார்த்து தேங்காயை இருப்பு வைக்க துவங்கியுள்ளனர். தற்போது கிலோவுக்கு ஐந்து ரூபாய் வரை உயர்ந்துள்ளது. அரசு கொப்பரை கொள்முதல் தீவிரமடைந்தால், மேலும் விலை உயர வாய்ப்புள்ளது, என்றனர்.

## திசுவாழை சாகுபடி தொழில் நுட்பம் தூத்துக்குடி விவசாயிகள் வருகை

பதிவு செய்த நாள் : மார்ச் 04,2012,23:49 IST

கருத்தை பதிவு செய்ய

உத்தமபாளையம் :திசு வாழை சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றி தெரிந்து கொள்ள, தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் தேனி வந்தனர்.
பணப்பயிர்கள் சாகுபடியில் தேனி மாவட்டம் முன்னணியில் உள்ளது. குறிப்பாக குறைந்த நிலப்பரப்பில் வாழை பயிரிடப்பட்டிருந்தாலும், அதிக விளைச்சல் மற்றும் ஏற்றுமதி தரத்தை கொண்டுள்ளது. மாவட்டத்தில் அதிகளவில் பயிரிடப்பட்டுள்ள திசு வாழை சாகுபடியில் பின்பற்றப்படும் தொழில் நுட்பங்கள் பற்றி தெரிந்து கொள்ள தூத்துக்குடி மாவட்டத்திலிருந்து வாழை விவசாயிகள் வந்திருந்தனர்.
உத்தமபாளையத்தில் உள்ள ஏ.சி.இ., வாழை திசு உற்பத்தி கூடத்தில் திசு வாழைகள் குறித்த அனைத்து தொழில்நுட்ப முறைகளையும், குளிரூட்டுதல், ஏற்றுமதி ரகத்திற்கான வழிமுறைகள் குறித்து விளக்கங்களை பெற்றனர். காமயகவுண்டன்பட்டியில் உள்ள விவசாயிகளின் தோட்டத்திற்கு சென்று நேரடியாக திசு வாழை சாகுடி குறித்து செயல் விளக்க நிகழ்ச்சியில் பங்கேற்றனர். தோட்டக்கலை துறை சார்பில் விவசாயிகளுக்கு தேனி மாவட்ட திசு வாழை தொழில்நுட்பங்களை பின்பற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## ஆண்டிபட்டி விவசாயிகள் பாதிப்பு:முருங்கை மரத்தில் வேர்ப்புழு

பதிவு செய்த நாள் : மார்ச் 04,2012,23:18 IST

ஆண்டிபட்டி :ஆண்டிபட்டி அருகே முருங்கை மரங்களை தாக்கிய வேர்ப்புழு நோய், நத்தைகளை கட்டுப்படுத்த முடியாமல் விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர்.
ஆண்டிபட்டி அருகே சிலுக்குவார்பட்டியில் பல ஏக்கர் நிலங்களில் முருங்கை சாகுபடி உள்ளது. இங்கு உற்பத்தி செய்யப்படும் முருங்கை தமிழகத்தின் பல பகுதிகளுக்கும் வெளி மாநிலங்களுக்கும் அனுப்பப்படு கிறது.
கடந்த சில மாதங்களுக்கு முன்பு பெய்த மழையில் ராமர் தோட்டத்தில் உள்ள முருங்கை மரங்களில் இலைகள் தொடர்ந்து உதிர்ந்து வந்தது. நோய் தாக்கத்திற்கான மருந்துகள் தெளித்தும் மரங்களை காப்பாற்ற முடியவில்லை. தற்போது நூறுக்கும் மேற்பட்ட மரங்கள் பட்டுப்போகும் நிலையில் உள்ளன. வேர் அழுகல் நோயையும், நத்தைகளையும் கட்டுப் படுத்த வழி தெரியாமல் கலங்கி உள்ளனர்.
விவசாயி பழனியப்பன் கூறியதாவது: கண்மாய் கரை அருகே தோட்டம் இருந்ததால் வேர்பகுதியில் எப்போதும் ஈரப்பதம் ஏற்பட்டது. இதனால் மரங்கள் பாதிக்கப்பட்டது. தற்போது கோடைகாலம் துவங்கி விட்டது. மற்ற தோட்டங்களில் உள்ள முருங்கைகளுக்கு பாதிப்பு இல்லை.
வேர் அழுகல் பாதித்த மரங்களுக்கு தொடர்ந்து மருந்து தெளிக்கப்படு கிறது,' என்றார்.

## விவசாயிகளுக்கு பயிற்சி

பதிவு செய்த நாள் : மார்ச் 04,2012,23:39 IST

விருதுநகர் :வேளாண் விற்பனை வாரியம், வணிகத்துறை சார்பில் ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர் விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.
ராஜபாளையம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நடந்த பயிற்சியில், ராஜபாளையம் வேளாண் உதவி இயக்குனர் முத்துலட்சுமி, ஸ்ரீவில்லிபுத்தூர் உதவி இயக்குனர் முத்து முனியாண்டி, தோட்டக்கலை உதவி இயக்குனர் அய்யாச்சாமி, ஒழுங்குமுறை விற்பனை கூட கண்காணிப்பாளர் சுந்தரமகாலிங்கம் பேசினர். வணிக அலுவலர் முருகேசன், உதவி வேளாண் அலுவலர்கள் மதுரைராஜன், செந்தில்குமார் செய்திருந்தனர்.

## கரும்புச்சாறு விற்பனைசென்னையில் விறுவிறுப்பு

பதிவு செய்த நாள் : மார்ச் 04,2012,23:15 IST

கருத்தை பதிவு செய்ய

சென்னை :வெயில் சுட்டெரிக்க ஆரம்பித்துள்ளதால், கரும்புச்சாறு விற்பனை களை கட்டத் துவங்கியுள்ளது.

சென்னை புறநகரில் கரும்புச்சாறு கடைகள் முளைக்கத் துவங்கியுள்ளன. வெயிலில் அலைந்து திரியும் போது, உடலில் ஆற்றல் குறையத்
துவங்கும். இதனால் சோர்வு அதிகரிக்கும். கரும்புச்சாற்றில் உடலுக்கு உடனடியாக சக்தி அளிக்கக் கூடிய குளுக்கோஸ் உள்ளது. இதனால், கரும்புச்சாறுக்கு கிராக்கி அதிகம். சென்னை நகரில், கரும்புச்சாறு பிழியும் இயந்திரம் பெரும்பாலான கடை
களில் தூய்மையாக இருப்பதில்லை. இதனால், சுகாதாரக் கேடு ஏற்படும் வாய்ப்புள்ளது. கரும்புச்சாறு விற்பனையாளர் கூறும்போது, "எல்லாக் கடைகளிலுமே சாறு பிழியும் இயந்திரம் ஒரே மாதிரி இருப்பதில்லை. சில கடைகளில், அவ்வாறு இருக்கலாம். சாதாரணமான சீசனில் கரும்புச்சாறு, 7 ரூபாய் முதல் 10 ரூபாய் வரை விற்கப்படுகிறது. கோடை சீசனில் குறைந்தபட்சம், 10 ரூபாயில் துவங்கி சில இடங்களில், 15 ரூபாய் வரையிலும் விற்கிறோம். கரும்புச்சாற்றுக்கு, பொதுமக்களிடம் நல்ல வரவேற்பு உள்ளது' என்றார்.

## கால்நடை வளர்ப்பு மேலாண்மை கருத்தரங்கு

பதிவு செய்த நாள் : மார்ச் 04,2012,22:54 IST

கருத்தை பதிவு செய்ய

செய்யூர் :தேசிய வேளாண் நிறுவனம், நபார்டு வங்கி ஆகியவற்றின் சார்பில், வட்டார அளவிலான கால்நடை வளர்ப்பு மேலாண்மை கருத்தரங்கம் பவுஞ்சூரில் நடந்தது. தேசிய வேளாண் நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் ரகுநாதன் தலைமை தாங்கினார். நபார்டு வங்கி உதவிப் பொது மேலாளர் சுதாகர் கால்நடை வளர்ப்பிற்கு, நபார்டு வங்கி வழங்கும் திட்டங்கள் குறித்து விளக்கினார். கால்நடை மருத்துவர் சின்னசாமி, கால்நடை வளர்ப்பில் கடைபிடிக்க வேண்டிய தொழில்நுட்பங்கள் குறித்து

விளக்கி கூறினார். பூச்சியியல் நிபுணர் வேல்முருகன், கால்நடைகள் இனப்பெருக்கம் குறித்து விளக்கினார். சேவா நிறுவனத்தை சேர்ந்த முருகன், தரமான மற்றும் தூய்மையான பால் உற்பத்தி முறை குறித்தும், பால்வளத்துறை முதுநிலை ஆய்வாளர் சம்பத், பால் கூட்டுறவு சங்கம் மற்றும் பால் விற்பனை குறித்தும் பேசினர். தேசிய வேளாண் நிறுவன இயக்குனர் ராமசுப்பிரமணியம் வாழ்த்துரை வழங்கினார். கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளை, தேசிய வேளாண் நிறுவனத்தின் துணை இயக்குனர் விஸ்வலிங்கம் செய்திருந்தார்.

## 100 லட்சம் பேல் பருத்தி ஏற்றுமதி : இந்திய பருத்தி கழக தலைவர் தகவல்

மார்ச் 04,2012,11:01



கோவை:""இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்கு நடப்பு ஆண்டில் பருத்தி ஏற்றுமதி 100 லட்சம் பேல்கள் வரை இருக்கும்", என இந்திய பருத்தி கழக சேர்மேன் பி.கே.மிஸ்ரா தெரிவித்தார்.கோவையில் தென்னிந்திய மில்கள் சங்கம் சார்பில் நடந்த "டெக்ஸ்பேர் 2012' ஜவுளி இயந்திர தொழில் கண்காட்சியை துவக்கி வைத்து அவர் பேசியதாவது:இந்த ஆண்டு பருத்தியில் விலையில் அதிக ஏற்றத்தாழ்வு இல்லை.

குவிண்டலுக்கு அதிகபட்ச ஆதார விலை ரூ.2,500 ஆக உள்ளது. இந்த விலைக்கு குறைவாக மார்க்கெட் விலை இறங்கினால், விவசாயிகள் பாதிக்காமல் இருக்க, இந்திய பருத்திக் கழகம் இவற்றை கொள்முதல் செய்யும். தற்போது நேரடியாக கொள்முதல் செய்யும் திட்டம் எதுவும் இல்லை. இருப்பினும், வர்த்தக நோக்கில் பருத்தியை வாங்கி, விற்பனை செய்யும் திட்டம் உள்ளது. பருத்தியை ஏற்றுமதி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான பரிந்துரைகள் மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு பருத்தி விளைச்சல் 340 லட்சம் பேல்களாக இருக்கும் என பருத்தி ஆலோசனை வாரியம் மதிப்பீடு செய்துள்ளது. பருத்தியின் விலையும் சீராக உள்ளது. சர்வதேச சந்தையில் இந்திய பருத்தியின் விலை குறைவாக உள்ளதால் சீனா, பாகிஸ்தான் நாடுகள் வாங்க ஆர்வம் காட்டிவருகின்றன. மில்களில் தற்போதைய தேவை மாதம் 20 லட்சம் பேல்கள். ஆண்டிற்கு 240 லட்சம் பேல்கள் தேவைப்படும். 100 லட்சம் பேல்கள் வரை ஏற்றுமதிக்கான வாய்ப்பு உள்ளது, என்றார். சைமா செயலாளர் செல்வராஜ் உடனிருந்தார்.

## சுகுணா பவுல்ட்ரிக்கு தேசிய விருது

மார்ச் 03,2012,00:09



கோவை: கோழி இறைச்சி தயாரிப்பு மற்றும் விற்பனையில் ஈடுபட்டு வரும், சுகுணா பவுல்ட்ரி நிறுவனத்திற்கு, தொழில் முனைவு மற்றும் தர உத்தரவாதத்திற்கான தேசிய விருது கிடைத்துள்ளது.இது குறித்து இந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் ஜி.பி.சுந்தரராஜன் கூறியதாவது;நிறுவனம், வாடிக்கையாளர்களுக்கு தரமான பொருட்களை அளிக்க வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளது. இதற்காக, விவசாயிகள், வினியோகஸ்தர்கள், சில்லரை விற்பனையாளர்கள் என அனைத்து தரப்பிலும், தரக் கட்டுப்பாட்டு கொள்கைகள் கடுமையாக பின்பற்றப்பட்டு வருகிறது. இதற்காக, நிறுவனம், அதிநவீன தொழில்நுட்ப மேம்பாட்டிற்காக அதிகளவில் முதலீடு செய்து வருகிறது. இதனை அங்கீகரிக்கும் வகையிலும், ஊக்கப்படுத்தும் வகையிலும், இந்த விருது கிடைத்துள்ளது. இவ்வாறு சுந்தரராஜன் கூறினார்.

## நான்கு மாதங்களில் உலக காபி ஏற்றுமதி 3 சதவீதம் சரிந்தது

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*உலக அளவில், நடப்பு பருவத்தில் (அக்டோபர் – செப்டம்பர்) ஜனவரி வரையிலான நான்கு மாதங்களில் காபி ஏற்றுமதி 3 சதவீதம் சரிந்து 3.26 கோடி மூட்டைகளாக உள்ளது. இது, 2010–11 பருவத்தின் இதே காலத்தில் 3.36 கோடி மூட்டைகளாக இருந்தது. ஒரு மூட்டை என்பது 60 கிலோ காபி கொட்டைகளை கொண்டதாகும்.*

*ஜனவரி மாதத்தில் மட்டும் சர்வதேச அளவில் காபி ஏற்றுமதி 79.90 லட்சம் மூட்டைகளாக இருந்தது. இது, 2011 ஜனவரியில் 88.70 லட்சம் மூட்டைகளாக இருந்தது. ஆக, அம்மாதத்திலும் ஏற்றுமதி 10 சதவீதம் குறைந்துள்ளது. ஜனவரி வரையிலான 12 மாதங்களில் ஏற்றுமதி 10.35 கோடி மூட்டைகளாக உயர்ந்துள்ளது. இது, 2011 ஜனவரி வரையிலான ஓர் ஆண்டில் 9.82 கோடி மூட்டைகளாக இருந்தது.*

*இந்நிலையில் நடப்பு பருவத்தில் உலக காபி உற்பத்தி 1.3 சதவீதம் குறைந்து 13.24 கோடி மூட்டைகளாக சரிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. பல நாடுகளில் நிலவும் மோசமான பருவநிலை காரணமாக உற்பத்தி குறைய வாய்ப்புள்ளது என சர்வதேச காபி சங்கம் தெரிவித்துள்ளது.*